# மகிழ்ச்சி

## குழந்தைகளின் குதூகலம்

**4**



**விடை தொகுப்பு**

Maria

Maria

மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.

முதல் பதிப்பு 2020

பதிவு அலுவலகம்
138, ஹைவேய்ஸ் காலனி, சுப்ரமணியபுரம், திருச்சிராப்பள்ளி – 620 020.

தலைமை அலுவலகம்
30 & 31, நட்சத்திரா, ஐ.ஏ.எஃப். சாலை, கிழக்கு தாம்பரம், சென்னை – 600 059.
தொலைபேசி : 044 – 22392332

மின்னஞ்சல்
info@mariapublishers.com

இணையதளம்
www.mariapublishers.com

வெளியிட்டோர்
மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.,
13, சுந்தர்ராஜ் நகர், சுப்ரமணியபுரம்,
திருச்சிராப்பள்ளி – 620 020.
தொலைபேசி : 0431 – 2331245

அட்டை வடிவமைப்பு
முத்துக்குமார்

புத்தக வடிவமைப்பு
பிரியா

அச்சிட்டோர்
தி சபையர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

## 1. செந்தமிழ் நாடெனும் போதினிலே

**பக்கம் 11**

**அ) பிரித்து எழுதுக.**

1. செம்மை + தமிழ் 2. பார் + எங்கும் 3. நாடு + என்ன 4. பல + ஓட

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. துன்பம் 2. செழிப்பின்மை 3. நலிந்த 4. இகழ்

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நாடெனும் 2. செழித்த 3. கம்பன் 4. வள்ளுவன்

**ஈ) சிறுவினாக்கள்:**

1. பாரதியாரின் இயற்பெயர் என்ன?

பாரதியாரின் இயற்பெயர் சுப்பிரமணியன்.

2. பாரதியாரின் சிறப்புப் பெயர்களை எழுதுக.

தேசியக்கவி, விடுதலைக்கவி, அமரக்கவி, முன்னறி புலவன், மகாகவி, உலகக்கவி, தமிழ்க்கவி முதலியன பாரதியாரின் சிறப்புப் பெயர்கள்.

3. ‘‘செந்தமிழ் நாடு’’ பாடலில் பாரதியார் குறிப்பிட்டுள்ள கவிஞர்கள் யாவர்?

‘‘செந்தமிழ் நாடு’’ பாடலில் கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆகிய கவிஞர்களை பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

**உ) பெருவினாக்கள்:**

1. தமிழ்நாட்டின் பெருமைகளாக பாரதியார் கூறுவன யாவை?

மலைவளம், கடல்வளம் என இயற்கை வளங்கள் மிகுந்த நாடு தமிழ்நாடு. காவிரி ஆறு, தென்பெண்ணை ஆறு, பாலாறு, வைகை ஆறு, பொருனை ஆறு முதலிய பல ஆறுகள் தமிழ்நாட்டிற்கு வளமும் செழிப்பும் சேர்க்கின்றன. கல்வியில் சிறந்து விளங்கும் நாடு, புகழ்பெற்ற கம்பன் பிறந்த நாடு நம் தமிழ்நாடாகும். தமிழ் மொழியில் இயற்றப்பட்ட பல அறநூல்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளன. இத்தகைய சிறப்பினை பெற்ற நாடு நம் தமிழ்நாடு என்று பாரதியார் கூறுகிறார்.

2. பாரதியார் பற்றி சிறு குறிப்பு வரைக.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் பிறந்தார். இவரின் பெற்றோர் சின்னசாமி ஐயர், இலட்சுமி அம்மாள். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் தனது 11 ஆம் வயதிலேயே கவிபாட தொடங்கினார். தமிழ் மொழியின் மீது அளவற்ற பற்றும்,

புலமையும் கொண்டவராக திகழ்ந்தார். இவர் கவிஞர், சமூக சீர்திருத்தவாதி, பத்திரிக்கை ஆசிரியர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பல பரிமாணங்களைக் கொண்டவர். சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் என பல மொழிகளிலும் புலமைப் பெற்றவர். கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி, தராசு முதலியன இவரது படைப்புகளாகும். தனது சுயசரிதையை கவிதையாக எழுதிய முதல் கவிஞர் பாரதியார் ஆவார்.

## 2. திருக்குறள்

**பக்கம் 14**

**அ) பிரித்து எழுதுக.**

1. எண் + என்ப
2. கண் + உடையர்
3. புறம் + கண்டு
4. மணல் + கேணி

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சேர்தல் 2. கல்லாதோர் 3. துன்புறுவர் 4. பன்மை

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. உவப்பத் 2. கல்லா 3. நாடாமல் 4. எழுமையும் 5. உலகின்

**ஈ) சிறுவினாக்கள்:**

1. "கற்க கசடறக் கற்பவை" – இக்குறளை விளக்குக.
நல்ல நூல்களை குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு அதற்கு ஏற்றப்படி நல்வழியில் நடக்க வேண்டும்.

2. "கண்ணென்ப வாழும் உயிர்க்கு" யாவை?
எண், எழுத்து ஆகிய இரு வகை கலைகளும் வாழும் உயிர்களுக்கு கண்கள் போன்றதாகும்.

3. கண்ணுடையவர் யார்? புண்ணுடையவர் யார்?
கண்ணுடையவர் என்பவர் கல்வியறிவு உள்ளவர் ஆவார். கல்வியறிவு இல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் ஆவார்.

4. ஊற்றுநீர் போலப் பெருகுவது எது?
கல்வியறிவு என்பது தோண்ட தோண்ட பெருகும் ஊற்றுநீர் போல தொடர்ந்து படித்தால் பெருகிக் கொண்டே இருக்கும்.

5. அழிவு இல்லாத செல்வம் எது? ஏன்?
ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வியைத் தவிர மற்ற அனைத்தும் செல்வங்கள் ஆகாது.

## 3. என்னென்ன கண்டாய் வழியிலே?

**பக்கம் 17**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| | |
|---|---|
| 1. நான்காம் | 3. நெற்பயிர்கள் |
| 2. இரு சக்கர வாகனம் | 4. வைக்கோலால் |

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. சுபிக்சா ஆற்றுக்குள் இறங்கி என்ன செய்தாள்?
   சுபிக்சா ஆற்றுக்குள் இறங்கி, ஆற்று நீரை தனது கைகளில் அள்ளி, அம்மாவின் மீது பூப்போலத் தெளித்தாள்.

2. வண்ணத்துப் பூச்சிகள் என்ன செய்தன?
   வண்ணத்துப் பூச்சிகள் பூக்களில் இருந்த தேனை உறிஞ்சிக் குடித்தன.

3. அணில் என்ன செய்து கொண்டிருந்தது?
   அணில் பின்னங்கால்களில் நின்று கொண்டு, முன்னங்கால்களில் ஒரு கடலையை பிடித்துக் கொறித்துக் கொண்டிருந்தது.

4. குடிசை வீட்டிலிருந்த தாய் என்ன செய்து கொண்டிருந்தாள்?
   குடிசை வீட்டிலிருந்த தாய் தன் குழந்தையை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு பால் சோறு ஊட்டினாள்.

5. சுபிக்சாவிற்கும் அவளது அம்மாவிற்கும் வியப்பை ஏற்படுத்தியது எது?
   பெரிய யானைகள் நிற்பதைப் போலக் காட்சியளித்த மலைக்குன்றுகள் இருவருக்கும் வியப்பை ஏற்படுத்தியது.

## 4. எழுத்துகள் பிறக்கும் முறை

**பக்கங்கள் 20-22**

**அ) விடுபட்ட மெய்யெழுத்துகளை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. மத்தளம் | 6. அப்பளம் | 11. தச்சர் | 16. மச்சம் |
| 2. சர்க்கரை | 7. சத்திரம் | 12. நீர் | 17. கிண்ணம் |
| 3. காய்கறி | 8. சமுத்திரம் | 13. நாற்காலி | 18. தந்தம் |
| 4. சங்கத்தமிழ் | 9. பட்டம் | 14. செவ்வகம் | 19. நத்தை |
| 5. வண்டிச்சக்கரம் | 10. சிங்கம் | 15. பள்ளி | 20. விளக்கு |

**ஆ) அகர வரிசையில் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. அன்பு | 4. ஈச்சம் | 7. எலுமிச்சை | 10. ஒன்று |
| 2. ஆதவன் | 5. உண்டியல் | 8. ஏடு | 11. ஓடம் |
| 3. இறகு | 6. ஊசி | 9. ஐராவதம் | 12. ஔடதம் |

**இ) கட்டங்களை பூர்த்தி செய்க.**

1. ங் + ஐ = ஙை   4. ட் + ஏ = டே   7. ழ் + அ = ழ   10. ற் + ஓ = றோ
2. த் + ஊ = தூ   5. ண் + ஆ = ணா   8. ல் + ஒ = லொ
3. ச் + எ = செ   6. ய் + இ = யி   9. வ் + ஔ = வௌ

**ஈ) புதிய சொற்களை உருவாக்குக.**

கதை, கப்பல், கவிதை, கல், கவலை, கன்னம், கதிரவன், கதவு, கடவுள், கடை.

## 5. மரம் சாட்சி கூறியது!

**பக்கம் 25**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. சாணக்கியர் யார்?

   சாணக்கியர் சந்திரகுப்த மௌரியரின் தலைமை ஆலோசகராவார்.

2. அரசவையில் வந்து அழுதது யார்? ஏன் அழுதார்?

   அரசவைக்கு வந்து அழுதவர் ஒரு முதியவர். தனது நண்பன் ஏமாற்றிவிட்டதாகவும், தனக்கு சரியான நியாயத்தை வழங்க வேண்டும் எனவும் கூறி அழுதார்.

3. முதியவர் எங்கு வைத்து நண்பனுக்குப் பணம் கொடுத்ததாக அவையில் சொன்னார்?

   ஒரு கோவிலில் வைத்து நண்பனுக்குப் பணம் கொடுத்தாக அந்த முதியவர் கூறினார்.

4. முதியவரின் நண்பர் அவையில் என்ன கூறினார்?

   அந்த முதியவர் கூறுவது அனைத்தும் பொய் எனவும், அவரை இதுவரை பார்த்ததே இல்லை எனவும் கூறினார்.

5. முதியவரைச் சாணக்கியர் எங்கு அனுப்பினார்? ஏன்?

   முதியவர் கோவிலில் வைத்து தனது நண்பருக்கு பணம் கொடுத்த போது அங்கு ஒரே ஒரு மரம் மட்டுமே இருந்ததாக கூறினார். எனவே அந்த மரத்தை சாட்சி கூற அழைத்து வருமாறு சொல்லி சாணக்கியர் முதியவரை கோவிலுக்கு அனுப்பினார்.

6. வழக்கை சாணக்கியர் எப்படிக் கையாண்டார்?

   மரத்தை அழைத்து வர கோவிலுக்கு சென்ற முதியவர், நீண்ட நேரமாகியும் அரசவைக்கு வரவில்லை. இதனால் கோபத்துடன் இருந்த அவரின் நண்பரிடம் “கோவில் வெகுதொலைவில் உள்ளதா? ஏன் இன்னும் அவர் வரவில்லை?” என்று சாணக்கியர் வினவினார். கோபத்தில் இருந்த முதியவரின் நண்பர், “கோவில் வெகுதொலைவில் இல்லை. மிக அருகில்தான் இருக்கிறது” என கோபத்துடன் கூறினார். “பணம் வாங்கவில்லை என்று கூறிய

உங்களுக்கு எப்படி அந்தக் கோவில் அருகில்தான் உள்ளது என்று தெரியும்?'' என சாணக்கியர் வினவினார். முதியவரின் நண்பரும் நன்றாக மாட்டிக்கொண்டோம் என்பதை உணர்ந்து, தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டார். மேலும், பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும் வாக்குறுதி அளித்தார். பின்னர் மிகுந்த சோர்வுடன் அவைக்கு வந்த முதியவரிடம் சாணக்கியர் மரம் சாட்சி சொன்னதாகக் கூறி பணத்தை ஒப்படைத்தார்.

## 6. வாழ்வு

**பக்கம் 28**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அச்சம் 2. தமிழ்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. பசுமை + தமிழ் 2. நல்ல + அன்பின் 3. உலகு + ஓங்கும்

**இ) வினாவிற்கு விடையளி.**

1. பாவேந்தர் கூறும் வாழ்வு எப்படிப்பட்டது?

அச்சம் தவிர்த்து, நல்ல அன்புடன் விளைவதே நல்வாழ்வு ஆகும். மாடி வீடுகளில் வாழ்வோர் என்றாலும் மானத்துடன் வாழ்வதே வாழ்வு. மலை உச்சியின் மீது இருந்து கொண்டு இருளை போக்கி ஒளியை பரப்பும் விளக்கைப் போல, உலகம் முழுவதும் புகழ்பெற்று விளங்குவதாகிய பசுந்தமிழ்நாட்டில் தமிழ் பரவிட வழிசெய்து வாழ்வதே சிறந்த வாழ்வு என பாரதிதாசன் கூறுகிறார்.

## 7. திரிகடுகம்

**பக்கம் 29**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. யாரைச் சேராமல் வாழ வேண்டும்?

கொடிய குணமுடையவர்களைச் சேராமல் வாழ வேண்டும்.

2. யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?

நீதியுடையவருடன் நட்புக் கொள்ள வேண்டும்.

3. எச்செயல்களைச் செய்யாமல் இருத்தல் வேண்டும்?

தனக்கு பழி வரும் செயல்களைச் செய்யாதிருத்தல் வேண்டும்.

4. திரிகடுகம் என்றால் என்ன?

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் குறிக்கும். இம்மூன்று மருந்துப் பொருட்களால் ஆகிய திரிகடுகம்

என்னும் மருந்து உடல்நலத்தைப் பேணிப் பாதுகாக்க உதவும். அதுபோலவே, இந்நூலில் மும்மூன்றாக உரைக்கப் பெற்ற செய்யுட்களில் கூறப்படும் அறங்கள் உயிர் நலம் பேணுவனவாகும். ஆகவே, இந்நூல் திரிகடுகம் என்று அழைக்கப்படுகிறது. இந்நூலை இயற்றியவர் நல்லாதனார் ஆவார்.

## 8. கனவை நனவாக்கும் கணிப்பொறி

**பக்கம் 32**

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கணிப்பொறி 2. இலத்தீன் 3. மடிக்கணினி 4. கணினி

### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சார்லஸ் பாப்பேஜ் 2. கணக்கிடுதல் 3. மடிக்கணினி
4. செயற்கைக்கோள் 5. ஓய்வு

### இ) சிறுவினாக்கள்:

1. **“திரும்பும் திசையெல்லாம் கணிப்பொறி”என்ற நிலையை எவ்வாறு அறிகின்றீர்?**

   மனித சமூகத்தின் வேலைப்பளுவைக் குறைத்து விரைந்து முடிப்பதற்கு உறுதுணையாக இருப்பதால் “திரும்பும் திசையெல்லாம் கணிப்பொறி” என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

2. **கணிப்பொறி எப்போது, யாரால் வடிவமைக்கப்பட்டது?**

   கி.பி. 1833 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சார்லஸ் பாப்பேஜ் என்பவரால் கணிப்பொறி வடிவமைக்கப்பட்டது.

3. **கணினியின் மூன்று வகைகள் யாவை?**

   மேசைக் கணினி, மடிக்கணினி, கையடக்கக் கணினி (திறன் பேசி) என்பன கணினியின் மூன்று வகைகள் ஆகும்.

4. **கணிப்பொறிக்கு எவை உள்ளன? எது இல்லை?**

   கணிப்பொறிக்கு மொழி உண்டு, விழியுண்டு, சிந்தனை உண்டு, செயல் உண்டு, ஒலி உண்டு, உழைப்பு உண்டு. ஆனால், ஓய்வு என்பது இல்லை.

5. **கணிப்பொறி பயன்படும் துறைகளில் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.**

   கணிப்பொறி இன்று பொறியியல், மருத்துவம், வணிகம், வங்கி, வேளாண்மை, கல்வி, வானியல் போன்ற பல துறைகளில் பயன்படுகிறது.

## 9. சொல்

**பக்கம் 38**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   சொற்கள் நான்கு வகைப்படும். அவை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

2. பெயர்ச்சொல் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
   ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.
   - பொருட்களின் பெயரைக் குறிப்பது பொருட்பெயர் ஆகும்.
     எ.கா. மனிதன், பசு, புத்தகம்.
   - இடத்தின் பெயரைக் குறிப்பது இடப்பெயர் ஆகும்.
     எ.கா. திருச்சி, கடற்கரை, கோவில்.
   - காலங்களின் பெயரைக் குறிப்பது காலப்பெயர்ஆகும்.
     எ.கா. நாள், மாதம், ஆண்டு.
   - உறுப்புகளின் பெயரைக் குறிப்பது சினைப்பெயர் ஆகும்.
     எ.கா. கண், தலை, கை.
   - நிறம், அளவு, வடிவம், பண்பு ஆகியவற்றைக் குறிப்பது குணப்பெயர் ஆகும்.
     எ.கா. இனிமை, நீலம், சதுரம்.
   - செய்கின்ற தொழிலை குறிப்பது தொழிற்பெயர்ஆகும்.
     எ.கா. படித்தல், உண்ணல், உறங்குதல்.

3. வினைச்சொல் என்றால் என்ன? முற்றுவினை மற்றும் எச்சவினை பற்றி விளக்குக.
   ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். இது முற்றுவினை, எச்சவினை என இரு வகைப்படும்.
   - ஒரு செயல் நடந்து முடிந்ததைக் கூறுவதே முற்றுவினையாகும்.
     எ.கா. இராமன் வரைந்தான்.
     இத்தொடரில் “வரைந்தான்” என்ற சொல் நடந்து முடிந்த ஒரு செயலைக் குறிக்கிறது. இதுவே முற்றுவினை ஆகும்.
   - முழுமை அடையாத செயலைக் குறிப்பது எச்சவினையாகும்.
     எ.கா. அவள் பாடிய, அவன் பெற்ற
     மேற்கண்ட தொடர்களில் வந்துள்ள “பாடிய”, “பெற்ற” என்பன முழுமையடையாத வினைச்சொற்கள். எனவே, இவை எச்சவினையாகும்.

4. தெரிநிலை வினைமுற்று மற்றும் குறிப்பு வினைமுற்று பற்றி குறிப்பு வரைக.

- செய்பவன், கருவி, நிலம், செயல், செய்பொருள், காலம் என்ற ஆறினையும் வெளிப்படையாக உணர்த்துவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.
  எ.கா. கண்ணன் வயலை உழுதான். இத்தொடரில்
  செய்பவன் – கண்ணன், கருவி – கலப்பை, நிலம் – வயல், செயல் – உழுதல், செய்பொருள் – நெல், காலம் – இறந்தகாலம்.
- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றி செய்பவன், கருவி, நிலம், செய்பொருள், காலம் ஆகியவற்றில் செய்பவனாகிய கருத்தாவை மட்டும் விளக்குவது குறிப்பு வினைமுற்றாகும். எ.கா. கண்ணன் உழவன். இத்தொடர் "கண்ணன் உழுதல் தொழில் செய்பவன்" என கருத்தாவாகிய கண்ணனின் தொழிலை மட்டும் விளக்கிக் கூறுகிறது.

5. பெயரெச்சம் மற்றும் வினையெச்சம் வேறுபாடு கூறுக.

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| முற்று பெறாத பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவடையும். | முற்று பெறாத வினைச்சொல்லைக் கொண்டு முடிவடையும். |
| எ.கா. மலர்ந்த மலர். இதில்"மலர்ந்த" என்பது முற்று பெறாத எச்சவினை ஆகும். | எ.கா. நடந்து வந்தான். இதில் "நடந்து" என்பது எச்சவினை, "வந்தான்" என்பது வினைச்சொல் ஆகும். |

6. இடைச்சொல் மற்றும் உரிச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

- தனித்து நின்று பொருள் தராமல் பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல்லுடன் இணைந்து வந்து பொருள் தருவது இடைச்சொல் ஆகும்.
  எ.கா. அ – போயின, ஐ – மரத்தை
- பெயரையும், வினையையும் சேர்த்து அவற்றின் தன்மையையும், குணத்தையும் உணர்த்துவது உரிச்சொல் ஆகும். இது செய்யுளில் மட்டுமே மட்டுமே வரும்.
  எ.கா. சால – அவள் சாலப் பேசினாள்.
  நனி – அவன் செய்த செயல் நனி சிறந்தது.

**ஆ) கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.**

1. கப்பல், பள்ளி, புத்தகம்
2. திருச்சி, பள்ளி, மைதானம்
3. நாள், ஆண்டு, மாதம்
4. கண், தலை, காது

5. இனிமை, சிவப்பு, சதுரம் 6. படித்தல், ஓடுதல், வரைதல்

**ஆ) பொருத்தி முடித்துப் பெயரெச்சமா, வினையெச்சமா என்று குறிக்கவும்.**

1. உண்டு உறங்கினான். – வினையெச்சம்
2. ஆடிய மயில் – பெயரெச்சம்
3. மலர்ந்த தாமரை – பெயரெச்சம்
4. கண்டு களித்தான். – வினையெச்சம்
5. தாவிய மான் – பெயரெச்சம்
6. படித்து முடித்தான். – வினையெச்சம்

**இ) கீழ்க்கண்ட சொற்களைக் கொண்டு பெயரெச்சம் மற்றும் வினையெச்சங்களை உருவாக்குக.**

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| வந்த பையன் | கூடி உண்டனர். |
| இமைக்காத கண்கள் | பாடி மகிழ்ந்தான். |
| பிரியாத நட்பு | போற்றி புகழ்ந்தான். |
| ஓடாத குதிரை | ஓடி ஒளிந்தான். |
| கிள்ளாத மலர் | வந்து அமர்ந்தான். |

## 10. நாவினால் சுட்ட வடு

**பக்கம் 42**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. தான் கோபம் கொள்வதற்கு காரணமாக அமுதன் தன் தந்தையிடம் கூறியதென்ன?
   பிறர் தனக்கு எரிச்சலை ஏற்படுத்துவதால் கோபம் கொள்வதாக அமுதன் தன் தந்தையிடம் கூறினான்.
2. அமுதன் எத்தனை முறை கோபப்பட்டான் என அறிந்து கொள்ள அவன் தந்தை கூறிய வழி என்ன?
   அமுதன் எத்தனை முறை கோபம் கொள்கிறான் என்பதை அறிந்து கொள்ள தோட்டத்திலிருந்த மரத்தின் மீது ஆணியை அடிக்கச் சொன்னார் அவனது தந்தை.
3. மரத்தில் நிறைய ஆணிகள் அடிக்கப்பட்டிருப்பதைக் கண்ட அமுதன் என்ன நினைத்தான்?
   மரத்தில் நிறைய ஆணிகள் அடிக்கப்பட்டு இருப்பதைக் கண்ட அமுதன் வீணாக பலமுறை கோபப்பட்டுள்ளேன். இனி கோபப்படுவதை குறைத்துக் கொள்ள வேண்டும் என நினைத்தான்.

4. இனி தனக்கு கோபம் வராது என்று அமுதன் எப்போது தன் தந்தையிடம் கூறினான்?

   மரத்தில் நிறைய ஆணிகள் அடிக்கப்பட்டு இருப்பதைக் கண்ட அமுதன் தனது கோபத்தை ஒவ்வொரு வாரமாக குறைத்துக் கொண்டே வந்தான். நான்காவது வாரம் ஒரு ஆணிக்கூட அடிக்கவில்லை. உடனே தன் தந்தையிடம் இனி தனக்கு கோபம் வராது எனக் கூறினான்.

5. மரத்தில் அடித்த ஆணிகளையெல்லாம் பிடுங்கிய பிறகு மரம் எவ்வாறு இருந்தது?

   மரத்திலுள்ள ஆணிகளை எல்லாம் பிடுங்கியப் பிறகு, ஆணிகள் அடிக்கப்பட்ட இடங்களில் அதன் அடையாளம் மட்டும் அப்படியே இருந்தது.

6. அமுதனின் தந்தை அவனுக்குக் கற்பித்த பாடம் என்ன?

   நாம் கோபம் கொண்டு, கோபத்தின் விளைவை மறந்து கொடிய சொற்களைப் பேசி விடுகிறோம். அந்தக் கொடுஞ்சொற்கள் என்றும் மாறாத வடுவாகப் பிறர் உள்ளத்தில் நிலைத்து இருக்கும். அந்த வடுவை என்ன முயற்சி செய்தாலும் அழிக்க முடியாது. மரத்தில் அடித்த ஆணியின் அடையாளம் போல அந்த வடுவானது நிலைத்து இருக்கும். எனவே வாழ்வில் கோபத்தை தவிர்க்க வேண்டும் என்ற பாடத்தை அமுதனுக்கு அவனது தந்தை கற்பித்தார்.

## 11. மூதுரை

**பக்கங்கள் 44-45**

**அ) சேர்த்து எழுதுக.**

1. பொல்லாச்சிறகை 2. தொல்லுலகில்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. நெல்லுக்கு நீர் எதன் வழியாகப் பாய்கிறது?

   நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியாக பாய்கிறது.

2. நெல்லுக்கு இறைத்த நீர் வேறு எதற்கும் பாய்கிறது என மூதுரை கூறுகிறது?

   நெல்லுக்கு இறைத்த நீரானது வாய்க்கால் வழியாக ஓடும்போது அங்கே உள்ள புல்லுக்கும் பாய்கிறது என மூதுரை கூறுகிறது.

3. வான்கோழி எதைப்போல ஆடியது?

   வான்கோழி மயிலைப் போல ஆடியது.

4. கல்வி கற்காதவனின் கவிதை எதைப் போன்றது?

   வான்கோழி தனது சிறிய அழகில்லாத சிறகை விரித்து ஆடுவதைப் போன்று கல்வி கற்காதவனின் கவிதையும் பயனின்றி போகும்.

## 12. நடவுப் பாட்டு

**பக்கம் 47**

**அ) நடவுப் பாட்டில் ஒன்று போல ஒலிக்கும் சொற்களை எடுத்து எழுதுக.**

ஆகாதுங்க, வேணாமுங்க, இருக்குமுங்க, பாத்துக்குங்க,
சாமியிங்க, வாருமுங்க, வேண்டாங்க, போடுங்க,
அருங்காத்தம்மா, உக்காருதம்மா, விளையனும், போடனும்.

**ஆ) கீழ்க்கண்ட சொற்களை எழுத்து வழக்கமாக மாற்றி எழுதுக.**

1. வேலை 2. நன்றாக 3. கோரைப்புல் 4. சுமந்து
5. கதை 6. காலை 7. குலதெய்வம் 8. படையல்
9. வருகின்ற 10. விளைகின்ற 11. நினைப்பு 12. கன்று
13. காய்ந்து 14. ஈன்ற

## 13. கண்டும் கேட்டும் மகிழ்வோம்!

**பக்கங்கள் 50-51**

**அ) பிரித்து எழுதுக.**

1. நெடுமை + தொடர் 2. படம் + கதை
3. கலந்து + உரை + ஆடுதல் 4. கல் + ஆட்டம்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நண்பர்கள் 2. கபடி 3. பழச்சாறு, குளிர்பானங்கள்
4. மீனுக்கு 5. பற்கள்

## 14. திணை, பால் மற்றும் எண்

**பக்கங்கள் 54-56**

**அ) பின்வரும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.**

உயர்திணை : அம்மா, சிறுவன், உழவன், அரசி, செல்வி, பாட்டி, மாணவன், வியாபாரி, குழந்தை, தோழி

அஃறிணை : அணில், வீடு, வயல், கப்பல், சூரியன், படகு, பள்ளி, பசு, பழம், மரம்

**ஆ) கீழ்க்காண்பவை எவ்வகை திணை என எழுதுக.**

1. உயர்திணை 2. அஃறிணை 3. உயர்திணை 4. அஃறிணை
5. அஃறிணை 6. உயர்திணை 7. அஃறிணை 8. உயர்திணை
9. உயர்திணை 10. அஃறிணை 11. அஃறிணை 12. அஃறிணை
13. அஃறிணை 14. உயர்திணை 15. உயர்திணை 16. உயர்திணை

**இ) பின்வரும் சொற்கள் எந்த பால் வகையைச் சார்ந்தவை என எழுதுக.**

1. பெண்பால் 2. பலவின் பால் 3. பலர்பால் 4. ஒன்றன் பால்
5. ஆண்பால் 6. பலவின் பால் 7. பலவின் பால் 8. ஒன்றன் பால்
9. பலவின் பால் 10. ஆண்பால்

**ஈ) பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களின் திணை மற்றும் பால் வகையைக் கண்டறிந்து எழுதுக.**

| | திணை | பால் | | திணை | பால் |
|---|---|---|---|---|---|
| 1. | அஃறிணை | ஒன்றன் பால் | 6. | அஃறிணை | பலவின் பால் |
| 2. | உயர்திணை | பெண்பால் | 7. | உயர்திணை | ஆண்பால் |
| 3. | உயர்திணை | ஆண்பால் | 8. | அஃறிணை | ஒன்றன் பால் |
| 4. | அஃறிணை | பலவின் பால் | 9. | உயர்திணை | பலர்பால் |
| 5. | அஃறிணை | ஒன்றன் பால் | 10. | உயர்திணை | பலர்பால் |

## 15. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

**பக்கம் 60**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. பொன்னம்மாவும், கண்ணம்மாவும் எங்கு குடி இருந்தார்கள்?
பொன்னம்மாவும், கண்ணம்மாவும் அடுத்தடுத்த வீடுகளில் குடி இருந்தார்கள்.

2. கோழியைப் பற்றி பொன்னம்மா கேட்டதற்கு கண்ணம்மா என்ன பதில் கூறினாள்?
கண்ணம்மாவின் வீட்டிற்குள் எந்த கோழியும் வரவில்லை எனவும், அவள் எதையும் பார்க்கவில்லை எனவும் கூறினாள்.

3. கோழியைத் திருடியது யார் என்பதை நீதிபதி எவ்வாறு கண்டுபிடித்தார்?
கோழியை திருடியவர் தலையில் கோழி இறகு உள்ளது என்று நீதிபதி கூறினார். கண்ணம்மா பயத்துடன் தனது தலையில் கோழி இறகு இருக்கிறதா என்று தன் தலையைத் தடவிப் பார்த்தாள். அதன் பின்னர் கண்ணம்மாதான் கோழியை திருடியவள் என்பதை நீதிபதியும் கண்டறிந்தார்.

4. பொன்னம்மாவிற்கு என்ன இழப்பீடு தருமாறு நீதிபதி கண்ணம்மாவிடம் கூறினார்?
பொன்னம்மாவிற்கு இழப்பீடாக ஐந்து கோழிகள் தர வேண்டும் என நீதிபதி கண்ணம்மாவிடம் கூறினார்.

5. “பொன்னம்மா, கண்ணம்மா” கதையிலிருந்து நீ கற்றுக் கொண்டது என்ன?

“பொன்னம்மா, கண்ணம்மா” கதையிலிருந்து அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது எனவும், பேராசை பெரும் நஷ்டத்தை தரும் எனவும் கற்றுக் கொண்டேன்.

## 16. நான்மணிக்கடிகை

**பக்கங்கள் 62-63**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) வலிமை 2. இ) சிதைக்கும் 3. அ) தீய நட்பு

4. ஈ) நான்கு அடிகளைக் கொண்டது

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. வேற்றுமை 2. பிரிந்து 3. உண்மை

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஒற்றுமை 2. கலம் 3. விளம்பி நாகனார் 4. நூற்றியொரு

**ஈ) சிறுவினாக்கள்:**

1. ஒருவனின் வலிமையை ஒழிப்பது எது?
   ஒற்றுமையின்மையே ஒருவனின் வலிமையை ஒழிக்கும்.

2. பாலின் சுவையைக் கெடுப்பது எது?
   பாலின் சுவையைக் கெடுப்பது பால் வைக்கப்பட்ட அசுத்தமான பாத்திரம்.

3. நான்மணிக்கடிகை பெயர்க்காரணம் கூறுக.
   நான்மணிக்கடிகை நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் நான்கு சிறந்த கருத்துகளைக் கூறுவதால் இது நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது.

4. நான்மணிக்கடிகை என்பதன் பொருள் என்ன?
   நான்மணிக்கடிகை என்பதற்கு நான்கு இரத்தினத் துண்டங்கள் என்று பொருள்.

**உ) பெருவினாக்கள்:**

1. நான்மணிக்கடிகை பாடலின் பொருளை எழுதுக.
   ஒற்றுமையின்மை ஒருவனது வலிமையை ஒழித்து விடும். பொய் பேசும் பண்பு உடம்பை அழித்து விடும். பால் வைக்கப்பட்ட அசுத்தமான பாத்திரத்தால் பாலின் சுவை கெடும். அது போன்று தீய நட்பு ஒருவனின் வம்சத்தையே அழித்து விடும்.

2. நான்மணிக்கடிகை நூல் பற்றி சிறு குறிப்பு வரைக.
   நான்மணிக்கடிகையை இயற்றியவர் விளம்பி நாகனார். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. “நான்மணிக்கடிகை” என்பதற்கு நான்கு இரத்தினத் துண்டங்கள் என்று பொருள். இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலும் நான்கு சிறந்த கருத்துகளைக்

கூறுவதால் இது நான்மணிக்கடிகை என பெயர் பெற்றது. இந்நூலில் மொத்தம் நூற்றியொரு பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளைக் கொண்டது.

## 17. புத்தகம்

**பக்கம் 65**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அன்னை, அறிவை
2. வற்றாக், புத்தகம்
3. மண்ணை, வாழ்வளிக்கும்
4. கண்ணை, கதை

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. "புத்தகம்" என்ற பாடலின் ஆசிரியர் யார்? அவரைப் பற்றி குறிப்பு வரைக.

"புத்தகம்" என்ற பாடலின் ஆசிரியர் வாணிதாசன். புதுவையை அடுத்த வில்லியனூரில் 1915 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் அரங்க. திருக்காமு, துளசியம்மாள். வாணிதாசனின் இயற்பெயர் அரங்கசாமி என்கிற எத்திராசலு. இவர் பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்க கல்வி பயின்றார். இவருக்கு "ரமி" என்ற புனைப்பெயரும் உண்டு. பாவலரேறு, பாவலர் மணி, தமிழ்நாட்டு வேர்ட்ஸ்வொர்த், தமிழ்நாட்டுத் தாகூர், புதுமைக் கவிஞர் என்பன இவரது சிறப்புப் பெயர்கள் ஆகும். இவர் தமிழச்சி, கொடிமுல்லை, இனிக்கும் பாட்டு, தொடுவானம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவருக்கு பிரெஞ்ச் குடியரசுத்தலைவர் செவாலியர் விருதை வழங்கியுள்ளார். இவர் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

2. புத்தகம் பற்றிய வாணிதாசனின் கருத்துகளை எழுதுக.

சிறுவர்கள் படிக்க கூடிய சிறிய சிறிய புத்தகங்கள் அனைத்தும் பெற்ற அன்னையைப் போல தினந்தோறும் நல்ல அறிவை ஊட்டும். படங்களும், பாடல்களும் நிறைந்த புத்தகங்கள் அனைத்தும் வற்றாத கடலைப் போல அளவில்லா கருத்துகளை ஊட்டும். படிப்போரின் அறிவுக் கண்களை திறப்பது புத்தகம். பல்வேறு கதைகளை கூறுவது புத்தகம். இம்மையையும், மறுமையையும் விளக்கி நல்வாழ்வை அளிப்பது புத்தகம். சிரித்துக் கொண்டு அறிவுரை கூறும் பாட்டியைப் போலவே தினந்தோறும் வாழ்விற்கு இனிய கருத்துகளை கூறுவதே புத்தகம் ஆகும்.

# 18. பெருந்தலைவர் காமராசர்

**பக்கங்கள் 68-69**

**அ) பொருள் எழுதுக.**

1. ஓயாது 2. இறந்தார் 3. சுயநலம் 4. நீக்க
5. கீழ்த்தளம் 6. நேரிய வழி 7. மகன் 8. வயது

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. நினைவிடம் 2. பெருந்தலைவர் 3. பதவியேற்றார்
4. தொழிற்சாலை 5. காகித ஆலை 6. தன்னலமற்ற

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. மறைந்தார் 2. பேரூர் 3. பேதை
4. இகழ் 5. அரிய 6. முடித்தார்

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. காமராசர் எங்கு, எப்போது பிறந்தார்?
   காமராசர் விருதுநகரில் 1903 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15 ஆம் நாள் பிறந்தார்.

2. காமராசர் கலந்து கொண்ட போராட்டங்களின் பெயர்களை எழுதுக.
   காமராசர் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், கள்ளுக்கடை மறியல், ஒத்துழையாமை இயக்கம் போன்ற போராட்டங்களில் கலந்து கொண்டார்.

3. காமராசர் எப்போது முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்?
   காமராசர் 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றார்.

4. காமராசர் கல்விக்கு ஆற்றிய பணிகள் யாவை?
   பள்ளிகளில் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாட்டைக் களைய பள்ளிச்சீருடைத் திட்டத்தைக் கொண்டு வந்தார். குலக்கல்வியை ஒழித்து, சிற்றூர் தோறும் பள்ளிகளை அமைத்தார். ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து கல்வி வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தார்.

5. காமராசர் நாட்டுக்கு ஆற்றிய பணிகள் யாவை?
   வேளாண்மை தொழில் வளர்ச்சிக்காக பல அணைக்கட்டுகளைக் காமராசர் கட்டினார். சாத்தனூர், வைகை, மணிமுத்தாறு, அமராவதி, ஆழியாறு, கீழ்பவானி, புள்ளம்பாடி முதலிய அணைகள் இவருடைய ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டவை ஆகும். நாட்டின் தொழில் உற்பத்தியை பெருக்க சீமைக்காரை (சிமெண்ட்) ஆலைகள், காகித ஆலைகள், நூற்பு ஆலைகள் முதலிய தொழிற்சாலைகளையும் உருவாக்கியவர் காமராசர்.

6. தமிழக அரசு காமராசருக்கு செய்த சிறப்புகள் யாவை?

தமிழக அரசு சென்னையில் காமராசர் வாழ்ந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்கியுள்ளது. நடுவண் அரசு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் உள்ள உள்நாட்டு முனையத்திற்கு காமராசர் பெயரைச் சூட்டிப் பெருமைப்படுத்தியதோடு, சென்னை கிண்டியில் நினைவிடம் ஒன்றையும் அமைத்துள்ளது.

## 19. காலம்

**பக்கம் 72**

**அ) விடுபட்ட காலங்களை பூர்த்தி செய்க.**

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | படித்தேன் | படிக்கின்றேன் | படிப்பேன் |
| 2. | ஆடினான் | ஆடுகிறான் | ஆடுவான் |
| 3. | ஓடினான் | ஓடுகின்றான் | ஓடுவான் |
| 4. | குளித்தேன் | குளிக்கின்றேன் | குளிப்பேன் |
| 5. | நடித்தாள் | நடிக்கிறாள் | நடிப்பாள் |
| 6. | எழுதினேன் | எழுதுகின்றேன் | எழுதுவேன் |
| 7. | வளர்ந்தது | வளர்கின்றது | வளரும் |
| 8. | விளையாடினான் | விளையாடுவான் | விளையாடுவேன் |
| 9. | நடந்தான் | நடக்கிறான் | நடப்பான் |
| 10. | பாடினாள் | பாடுகிறாள் | பாடுவாள் |

## 20. எது தியாகம்?

**பக்கம் 77**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. புத்தர் எதை தன்னுடன் வைத்திருந்தார்? எதற்காக?

புத்தர் ஒரு சிறிய மேளத்தை தன்னுடன் வைத்திருந்தார். யார் அதிக அளவில் தானம் தருகிறார்களோ அப்போது அந்த மேளத்தை எடுத்து அடிப்பார்.

2. புத்தரின் சொற்பொழிவைக் கேட்ட பேரரசர் என்ன செய்தார்?

புத்தரின் சொற்பொழிவைக் கேட்ட பேரரசர் பொருளைத் துறப்பது இவ்வளவு பெருமைக்குரியதா எனவும், தனது துறவு உள்ளத்தை அறிந்து புத்தர் பெருமான் தன்னை புகழ்ந்து பாராட்ட வேண்டும் எனவும் எண்ணினார்.

3. பேரரசர் ஊர்வலத்தில் யாரைச் சந்தித்தார்? அவர் பேரரசரிடம் என்ன வேண்டினார்?

பேரரசர் ஊர்வலத்தில் வயிறு ஒட்டி பரிதாபமாகக் காட்சி அளித்த கிழவி ஒருத்தியை கண்டார். அந்த பாட்டி தனக்கு பசிப்பதாகவும், பசியைப் போக்க உதவுமாறும் வேண்டினாள்.

4. கிழவியின் காணிக்கையை ஏற்ற புத்தர் என்ன செய்தார்?

புத்தர் கிழவி கொடுத்த காணிக்கையான மாதுளம் பழத்தை ஏற்றுக் கொண்டு மேளத்தை அடித்தார்.

5. எது விலைமதிப்பில்லாத காணிக்கை என்று புத்தர் பேரரசரிடம் கூறினார்? ஏன்?

பொருள்களின் அளவை வைத்து ஒருவரின் காணிக்கையை முடியாது. எந்த உணர்வில், எப்படிப்பட்ட நிலையில் அதைத் தருகிறார்கள் என்பதை வைத்துதான் மதிப்பிட முடியும். உமது பொன், பொருளை விட அந்த வயதான மூதாட்டி அளித்த உயிர்காக்கும் மாதுளம் பழம் மிகவும் சிறந்தது. தன் உயிர் போனாலும் போகட்டும் என பழத்தைத் தந்த பாட்டியின் தியாகம் பெரும் மதிப்புடையது என்று புத்தர் பேரரசரிடம் கூறினார்.

## 21. குடும்பத்தோடு பயணம்

**பக்கம் 80**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. “குடும்பத்தோடு பயணம்” என்ற பாடலில் ஒன்று போல ஒலிக்கும் சொற்களை எடுத்து எழுதுக.

நாத்துனா, மாத்துனா, ஏத்துனா, போத்துனா, சாத்துனா, தேத்துனா, தின்னுக்கிட்டா, பேசிக்கிட்டா, கடிச்சுக்கிட்டா.

2. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றி சிறு குறிப்பு வரைக.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாள் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகேயுள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரின் பெற்றோர் அருணாச்சலம், விசாலாட்சி. இவர் எளிமையான தமிழில் சமூகச் சீர்திருத்த பாடல்களை பாடுவதில் சிறந்தவர். 1952 ஆம் ஆண்டு பாரதிதாசனிடம் தமிழ் பயின்றார். பாரதிதாசன் நடத்தி வந்த “குயில்” இதழிலும் உதவியாளராக இருந்தார். பாரதிதாசன் மீது மிகுந்த பற்றும், அன்பும் கொண்ட இவர் 1959 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார். இவரின் பாடல்கள் அனைத்தும் நாட்டுடமையாக்கப்பட்டுள்ளன.

## 22. திருக்குறள்

**பக்கம் 83**

**அ) பிரித்து எழுதுக.**

1. சிறிது + எனினும் 2. மாசு + அற்றார் 3. நன்று + அன்று
4. உய்வு + உண்டாம் 5. செய் + நன்றி

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. எளிது 2. சிறிது 3. தீமை 4. இன்பம் 5. இனிய

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. திருவள்ளுவர் 2. உதவிக்கு 3. எழுபிறப்பும் 4. மறப்பது
5. கொன்றார்க்கும்

**ஈ) சிறுவினாக்கள்:**

1. "செய்யாமல் செய்த உதவிக்கு" எனும் குறளின் பொருள் யாது?
   ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாதபோதும், அவர் நமக்கு நன்மை செய்தார் என்றால் அதற்கு கைம்மாறாக மண்ணுலகையும், விண்ணுலகையும் கொடுத்தாலும் சமம் ஆகாது.

2. இவ்வுலகை விட மிகப்பெரியது எது?
   உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை அறிந்தால் அது இவ்வுலகைவிட மிகப் பெரியதாகும்.

3. நன்மை கடலின் பெரிது, ஏன்?
   என்ன பயன் என்று எண்ணாமல், ஒருவர் அன்பினால் செய்த உதவியின் சிறப்பு கடலை விடப் பெரியதாகும்.

4. "நன்றி மறப்பது நன்றன்று" என்ற குறளின் விளக்கம் தருக.
   ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல. அவர் தீமை செய்திருந்தால் அதை உடனே மறப்பது நல்லது.

5. யாருக்கு வாழ்வு உண்டு? யாருக்கு வாழ்வு இல்லை?
   அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு வாழ்வில்லை.

## 23. சிவகங்கைச் சீமை வீர மருது சகோதரர்கள்

**பக்கம் 86**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இ) 1748 2. அ) முத்து வடுகநாதர் 3. இ) வேலுநாச்சியார்
4. ஆ) சிவன்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. 1753 2. 1785 முதல் 1801 3. காளையார் கோவிலில்
4. சோழபுரம்

**இ) சிறுவினாக்கள்:**

1. மருது சகோதரர்களின் பிறப்பு பற்றி எழுதுக.

   விருதுநகர் மாவட்டம் முக்குளம் என்ற கிராமத்தில் 1748 ஆம் ஆண்டு 15 ஆம் நாள் உடையார் சேர்வை என்ற மொக்க பழனியப்பனுக்கும், ஆனந்தாயி என்ற பொன்னாத்தாளுக்கும் மகனாகப் பிறந்தவர் பெரிய மருது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு 1753 ஆம் ஆண்டு சின்ன மருது பிறந்தார்.

2. மருது சகோதரர்கள் மத நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை எவ்வாறு வெளிப்படுத்தினர்?

   மருது பாண்டியர் இருவரும் மத நல்லிணக்கம், ஒற்றுமை ஆகியவற்றை ஓங்கச் செய்தனர். இஸ்லாமியருக்கும், கிறிஸ்தவர்க்கும் வழிபாட்டுத் தலங்களை கட்டிக் கொடுத்தனர். காளையார் கோவிலில் சிவன் கோவில் கோபுரத்தைக் கட்டினர்.

3. மருது சகோதரர்கள் ஆங்கிலேயப் படையால் எங்கு, எப்போது கைது செய்யப்பட்டனர்?

   ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடியதால் சூழ்ச்சி செய்து மருது சகோதரர்களையும், அவரது குடும்ப உறுப்பினர்களையும் 1801 ஆம் ஆண்டு சோழபுரத்தில் கைது செய்தனர்.

**ஈ) பெருவினாக்கள்:**

1. சிவகங்கைச் சீமையின் போர்ப்படை பற்றி எழுதுக.

   மருது சகோதரர்கள் சிவகங்கைச் சீமை அரசர் முத்து வடுகநாதரின் படையில் சேர்ந்து தங்களின் திறமைகளை நிரூபித்து வந்தனர். இவர்கள் திப்பு சுல்தான் உதவியுடன் 1779 ஆம் ஆண்டு தமது கிளர்ச்சியை தொடங்கி ஆர்காட்டு நவாப், தொண்டைமான் மற்றும் கும்பினியர்களின் படைகளை வென்று 1780 ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையை மீட்டு அரசியார் வேலுநாச்சியாரை மீண்டும் அரியணையில் அமர்த்தினர்.

2. மருது சகோதரர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடிய விதம் பற்றி எழுதுக.

   மருது சகோதரர்கள்ஆங்கிலேயரைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்ட 1785 முதல் 1801 இறுதி வரை ஆயுதம் தாங்கி போராடினார்கள். தென்னிந்தியாவில் ஆங்கிலேய அரசுக்கு எதிராக புலித்தேவர்,

கட்டபொம்மன், ஹைதர் அலி, திப்பு சுல்தான், தீரன் சின்னமலை ஆகியோருடன் இணைந்து போராடி வந்தனர். இப்போராட்டம் தென்னிந்தியாவில் நடந்த விடுதலைப் போரில் முதன்மையானதாகவும், திருப்புமுனை கொண்டதாகவும் அமைந்தது.

3. மருது சகோதரர்களின் தியாகம் எவ்வாறு பெருமைப்படுத்தப்பட்டுள்ளது?

மருது சகோதரர்களை 1801 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் ஆங்கிலேய அரசு தூக்கிலிட்டது. இவர்களின் தியாகத்தையும், வீரத்தையும் பெருமைப்படுத்த இவர்களது தபால் தலையை 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் நாள் இந்திய அஞ்சல்துறை வெளியிட்டது. சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் காளீஸ்வரர் கோவிலில் கற்சிலைகளுக்கு எதிர்ப்புறத்தில் நினைவு மண்டபமும் அமைத்துப் பெருமைப்படுத்தப்பட்டனர்.

## 24. இடம்

**பக்கம் 89**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) மூன்று 2. இ) நான் 3. அ) நீ 4. ஆ) அவர் 5. இ) அவை

**ஆ) பொருத்துக.**

1. அவள் – படர்க்கை ஒருமை
2. என் – தன்மை ஒருமை
3. நீங்கள் – முன்னிலைப் பன்மை
4. இவர்கள் – படர்க்கைப் பன்மை
5. நாம் – தன்மைப் பன்மை
6. உன் – முன்னிலை ஒருமை

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அவள் 2. நான் 3. நீ 4. அது 5. என்

**ஈ) வினாக்களுக்கு விடையளி.**

1. இடம் என்றால் என்ன?

ஒருவர் பேசும்போது தன்னையோ, தன் முன்னால் நின்று கேட்பவரையோ அல்லது மற்றவரையோ குறிப்பிட்டுக் கூறுவது இடம் எனப்படும். இடம் என்பது சொற்கள் வழங்குவதற்குரிய இடத்தைக் குறிக்கும்.

2. இடம் எத்தனை வகைப்படும்?

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும்.

3. தன்மை ஒருமை மற்றும் தன்மைப் பன்மையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

- ஒருவர் தன்னை மட்டும் குறிப்பிட்டுக் கூறுவது தன்மை ஒருமை ஆகும். நான், என் ஆகியன தன்மை ஒருமை.

  எ.கா. நான் நேற்று கோவிலுக்கு சென்றேன்.

- ஒருவர் தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் குறிப்பிட்டுக் கூறுவது தன்மைப் பன்மை ஆகும். நாங்கள், நாம், எங்கள் ஆகியன தன்மைப் பன்மை.

  எ.கா. இந்தியா எங்கள் நாடு.

4. முன்னிலை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

   ஒருவர் பேசும்போது அவரின் முன்னால் நின்று கேட்பவர்களைக் குறிப்பிடுவது முன்னிலை ஆகும். இது முன்னிலை ஒருமை, முன்னிலைப் பன்மை என இரு வகைப்படும்.

5. படர்க்கை எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

   படர்க்கை ஒருமை, படர்க்கை பன்மை என படர்க்கை இரண்டு வகைப்படும்.

   - படர்க்கை ஒருமை : ஆண்பால், பெண்பால், ஒன்றன் பால் இவை மூன்றும் படர்க்கை ஒருமை ஆகும். அவன், இவன், அவள், இவள், அது என்பன படர்க்கை ஒருமை.

     எ.கா. அவன் பாடல் பாடுகிறான்.

   - படர்க்கைப் பன்மை : பலர்பால், பலவின் பால் ஆகிய இரண்டும் படர்க்கைப் பன்மை ஆகும். அவர்கள், இவர்கள், அவை, இவை என்பன படர்க்கைப் பன்மை.

     எ.கா. இவர்கள் சென்னை செல்கிறார்கள்.

## 25. மரம் வேண்டிய வரம்!

**பக்கம் 92**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. அரசன் தன் புதிய அரண்மனையை எவ்வாறு கட்ட நினைத்தான்?

   அரசன் தன் அரண்மனையை ஒரே மரத்தூணால் கட்ட வேண்டும் என நினைத்தான்.

2. பெரிய மரம் எங்கிருப்பதாக அரசன் கூறினான்?

   அரண்மனைத் தோட்டத்தில் நீண்டு உயர்ந்த பெரிய மரம் ஒன்று இருப்பதாக அரசன் கூறினான்.

3. தோட்டத்திலிருந்த மரம் எதற்காக வருந்தியது?

   தன்னை வெட்டிவிட்டால் தனது நிழலில் வாழும் ஆயிரக்கணக்கான செடிகள் அழிந்துவிடும் என மரம் வருந்தியது.

4. அரசனின் கனவில் தோன்றிய மரம் என்ன கூறியது?

அரசனின் கனவில் தோன்றிய மரம் தான் நாற்பதாயிரம் ஆண்டுகளாக வாழ்வதாகவும், தன்னுடைய நிழலில் தனது இனம் ஏராளமாக உள்ளது எனவும், தன்னை வெட்டினால் ஏராளமான செடிகளும், கொடிகளும் வாட நேரிடும் எனவும் கூறி வருத்தப்பட்டது. அதனால் தன்னை வெட்ட வேண்டாம் என்று மரம் அரசனிடம் கூறியது.

5. அரசனிடம் மரம் வேண்டிய உதவி என்ன?
   இலைகள் உள்ள கிளைப்பகுதியை முதலில் வெட்டுங்கள். பிறகு கிளைகளை வெட்டுங்கள். நான் மொட்டை மரமாக நிற்பேன். இறுதியாக அடிமரத்தை வெட்டுங்கள் என்று அரசனிடம் வேண்டியது மரம்.

6. மரத்தின் அன்புள்ளத்தைக் கண்ட அரசன் என்ன முடிவு செய்தான்?
   மரத்தின் அன்புள்ளத்தைக் கண்ட அரசன், அந்த மரத்தை வெட்ட வேண்டாம் என முடிவு செய்தான்.

## 26. வெற்றிவேற்கை

**பக்கம் 96**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. குன்றும் 2. கெடும் 3. கமழும்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஆவின்பால் 2. தண்கடல் 3. அதிவீரராம பாண்டியர்
4. நறுந்தொகை

**இ) சிறுவினாக்கள்:**

1. நறுந்தொகை என்பதன் பொருள் யாது?
   நறுந்தொகை என்றால் நல்ல பாடல்களின் தொகுப்பு என்று பொருள்.

2. தங்கத்தின் பண்பு என்ன?
   தங்கத்தை தீயிலிட்டு சுட்டாலும் அதன் பொன் ஒளி குறையாது.

3. கடலைக் கலக்கினால் என்ன நிகழும்?
   குளிர்ந்த கடலை எவ்வளவு கலக்கினாலும் அது சேறாகாது.

4. அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.
   நைடதம், இலிங்கபுராணம், காசிக் காண்டம், வாயு சங்கிதை, திருக்கருவை அந்தாதி.

**ஈ) பெருவினாக்கள்:**

1. அதிவீரராம பாண்டியர் பற்றி குறிப்பு வரைக.
   வெற்றிவேற்கை என்பது கொற்கை நகரத்தை ஆண்ட அரசர் அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்ட நூல் ஆகும். இவரை

"தென்காசிப் பாண்டியர்" என்றும் கூறுவர். இவர் இயற்றிய பிற நூல்கள் நைடதம், இலிங்கபுராணம், காசிக் காண்டம், வாயு சங்கிதை, திருக்கருவை அந்தாதி.

2. வெற்றிவேற்கை பாடலின் பொருளை எழுதுக.

பசும்பாலை சுண்டக் காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது. தங்கத்தை தீயிலிட்டு சுட்டாலும் அதன் பொன் ஒளி குறையாது. சந்தனக் கட்டையை நன்றாக அரைத்தாலும் அதன் மணம் குறையாது. அகிற் கட்டையை நெருப்பிலிட்டு புகைத்தாலும் கெட்ட மணம் வராது. குளிர்ந்த கடலை எவ்வளவு கலக்கினாலும் சேறாகாது. அதைப்போலவே உலகில் வாழும் நல்லவர்கள் தங்களின் நல்ல குணத்திலிருந்து என்றும் மாறமாட்டார்கள்.

## 27. ஆரோக்கியமே ஆனந்தம்

**பக்கங்கள் 99-101**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. மணிமாறன் எப்படிப்பட்டவன்?

மணிமாறன் விதவிதமான உணவுகளை உண்பான். விளையாட்டு என்றாலே பிடிக்காது. மிகவும் குண்டாக இருப்பான்.

2. மாணவர்கள் கிண்டல் செய்த போது மணிமாறன் என்ன செய்தான்?

மாணவர்கள் கிண்டல் செய்வது அவனுக்கு மிகுந்த மன வேதனையைத் தந்ததால் அவர்களை அடிக்கவும், திட்டவும் செய்தான்.

3. உடல்நிலை நன்றாக இல்லையெனில் என்னவாகும் என ஆசிரியர் கூறினார்?

உடல்நிலை நன்றாக இல்லையெனில் எந்த வேலையையும் செய்ய முடியாது, படிக்க முடியாது, விளையாட முடியாது, மகிழ்ச்சியாக இருக்க முடியாது எனவும், உடல்நிலையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

4. உடல் பருமனை அதிகரிக்கச் செய்யும் உணவுகள் என்னென்ன?

துரித உணவு வகைகளான பீட்சா, பர்கர், நூடுல்ஸ், சமோசா போன்றவை உடல் பருமனை அதிகரிக்கச் செய்யும் உணவுகள் ஆகும்.

5. உடலுக்கு சத்துகள் தரும் நம் நாட்டு உணவுப் பொருட்கள் யாவை?

பருப்பு, பச்சைக் காய்கறிகள், கோதுமை, தயிர், காய்கறிக்கலவை, பழக்கலவை ஆகியவை உடலுக்கு சத்துகள் தரும் நம் நாட்டு உணவுப் பொருட்கள் ஆகும்.

6. விளையாட்டுப் பற்றி மணிமாறனிடம் ஆசிரியர் கூறிய அறிவுரை யாது?

தனி விளையாட்டுப் பிடிக்கவில்லை என்றால் குழு விளையாட்டைத் தேர்ந்தெடுக்கலாம் எனவும், கால்பந்து, கூடைப்பந்து, மட்டைப்பந்து, பூப்பந்து முதலிய விளையாட்டுகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து விளையாடுமாறும் கூறினார். கணினியின் முன்னால் அமர்ந்து விளையாடுவது என்பது உடல் பருமனை மேலும் அதிகரித்து விடும் எனவும் அறிவுரை கூறினார்.

**ஆ) கீழ்க்காணும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

1. விளையாட்டு உடலுக்கு நல்லது.
2. ஆசிரியர் அறிவுரை கூறினார்.
3. விளையாடுவதால் உடல் சுறுசுறுப்பாக இருக்கும்.
4. காய்கறிகள் உடலுக்கு சத்துகளை அளிக்கும்.
5. துரித உணவுகள் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும்.

**இ) ஆரோக்கிய வாழ்விற்கு இவற்றுள் எவை தேவை, எவை தேவையில்லை என அட்டவணைப்படுத்துக.**

தேவை : பருப்பு, பால், முட்டை, பழங்கள், ரொட்டி, நெய், காய்கறிகள், சிறுதானியங்கள்

தேவையில்லை : சமோசா, பர்கர், பீட்சா, நூடுல்ஸ், குளிர்பானங்கள்

**ஈ) உனக்குத் தெரிந்த விளையாட்டுகளை அட்டவணைப்படுத்துக.**

| உள்ளரங்க விளையாட்டுகள் | வெளியரங்க விளையாட்டுகள் |
|---|---|
| பல்லாங்குழி | நொண்டி |
| சதுரங்கம் | கால்பந்து |
| ஆடு புலி ஆட்டம் | மட்டைப்பந்து |
| கூடைப் பந்தாட்டம் | கிட்டிப்புள் |
| தாயம் | பானை உடைத்தல் |
| கபடி | பூப்பந்தாட்டம் |

**உ) தானியங்களின் பெயர்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக.**

நெல், வரகு, சோளம், தினை, கேழ்வரகு, சாமை, குதிரைவாலி, கோதுமை, கொள்ளு.

## 28. முன்னிடைச் சொற்கள், இணைப்புச் சொற்கள்

**பக்கங்கள் 104-105**

**அ) கீழ்வரும் சொற்றொடர்களில் வரும் முன்னிடைச் சொற்களை எடுத்து எழுதுக.**

1. மேலே 2. கீழே 3. எதிரில் 4. உள்ளே 5. மீது

**ஆ) கோடிட்ட இடங்களைத் தகுந்த இணைப்புச் சொற்களால் நிரப்புக.**

1. ஆனால் 2. அல்லது 3. ஆனால் 4. எனவே 5. ஆனால்

**இ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) இணைப்புச் சொல் 2. அ) முன்னிடைச் சொல் 3. இ) ஆனால்
4. ஆ) முன்னே 5. அ) எனவே

**ஈ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை முன்னிடைச் சொல், இணைப்புச் சொல் என வகைப்படுத்துக.**

| முன்னிடைச் சொல் | இணைப்புச் சொல் |
|---|---|
| மேல் | எனவே |
| பின்னே | ஆயினும் |
| அடுத்து | ஆனால் |
| இடையில் | அதனால் |
| எதிரில் | எனினும் |

**உ) வினாக்களுக்கு விடையளி.**

1. முன்னிடைச் சொற்கள் என்றால் என்ன?

   ஒரு சொற்றொடரில் இரண்டு சொற்களுக்கு இடையே உள்ள தொடர்பை விளக்கும் சொற்கள் முன்னிடைச் சொற்கள் எனப்படும். இவை வேற்றுமை உருபுகளாகவும் வரும்.

2. முன்னிடைச் சொல்லிற்கு எவையேனும் நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   - நாய் வீட்டிற்கு <u>வெளியே</u> நிற்கிறது.
   - பூனை மரத்தின் <u>கீழே</u> தூங்கியது.
   - புத்தகம் மேசையின் <u>மேலே</u> இருக்கிறது.
   - கண்ணன் நாற்காலியின் <u>மீது</u> அமர்ந்தான்.

3. இணைப்புச் சொற்கள் என்றால் என்ன?

   இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் மற்றும் வாக்கியங்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்தும் சொற்கள் இணைப்புச் சொற்கள் எனப்படும். இதற்கு இணைப்பிடைச் சொற்கள் என்ற பெயரும் உண்டு.

4. இணைப்புச் சொல்லிற்கு எவையேனும் நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   - காற்று பலமாக வீசியது. <u>அதனால்</u> விளக்கு அணைந்தது.
   - மழை பெய்தது. <u>எனவே</u> நான் குடை எடுத்துச் சென்றேன்.
   - கமலா நன்றாகப் பாடுவாள். <u>ஆனால்</u>, யாழினி பாட மாட்டாள்.
   - மலர்விழி நன்றாகப் படித்தாள். <u>ஆகையால்</u> அவள் தேர்வில் தேர்ச்சி பெற்றாள்.

## 29. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

**பக்கம் 109**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. அரசர் வளவனின் வழக்கம் என்ன?

   ஒவ்வொரு நாளும் தன்னை முதலில் சந்திப்பவருக்கு ஒரு பொற்காசு பரிசு வழங்குவது அரசர் வளவனின் வழக்கமாகும்.

2. அரசரிடம் பரிசு பெற வந்தவர் யார்? அதற்காக அவர் செய்தது என்ன?

   அரசரிடம் பரிசு பெற வந்தவர் ஓர் ஏழை அந்தணன். அதற்காக அவர் நள்ளிரவில் அரண்மனைக்கு வந்தார்.

3. அந்தணரைக் காவலர்கள் ஏன் சிறையில் அடைத்தனர்?

   நள்ளிரவில் அரண்மனைக்கு வந்த அந்தணரை திருடன் என எண்ணி காவலர்கள் சிறையில் அடைத்தனர்.

4. உதவி செய்ய நினைத்த அரசர் அந்தணரிடம் என்ன கூறினார்?

   ஒரு பொற்காசிற்காக சிறையில் துன்பப்பட்ட அந்தணருக்கு அரசர் உதவி செய்ய நினைத்தார். எனவே, அவரிடம் "உனக்கு எவ்வளவு பொற்காசுகள் வேண்டும்?" என கேட்டார்.

5. துறவி என்ன கூறினார்? அவர் பேச்சைக் கேட்ட அந்தணரின் மனதில் ஏற்பட்ட மாற்றம் என்ன?

   போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. ஆசையினால் துன்பம் வருகிறது. துன்பம் தராத ஆசை எதுவும் இல்லை. ஆசையை விட்டால்தான் உண்மையான மகிழ்ச்சி கிடைக்கும். எனவே ஆசைப்படுவதை விட்டுவிட வேண்டும் என துறவி கூறினார். இதைக் கேட்ட அந்தணன் தனக்குள் இருக்கும் பொற்காசின் மீதான ஆசையை விட்டுவிடலாம் என தனது மனதை மாற்றிக் கொண்டான்.

6. "பொற்காசுகள் வேண்டாம்" என அந்தணர் கூறியதன் காரணம் என்ன?

   ஒரு பொற்காசிற்கு ஆசைப்பட்டு சிறையில் துன்பப்பட்டதை எண்ணிப் பார்த்தார் அந்த அந்தணர். மேலும், துறவி கூறியவாறே போதும் என்ற உள்ளம் உடையவனே மகிழ்ச்சியான வாழ்வை வாழ முடியும் என்ற உண்மையையும் புரிந்து கொண்டார். எனவே, தனக்கு பொற்காசுகள் வேண்டாம் என அரசரிடம் அந்தணர் கூறினார்.

## 30. எட்டுக் கோழிக் குஞ்சுகள்

**பக்கங்கள் 112-113**

**அ) "எட்டுக் கோழிக் குஞ்சுகள்" என்ற பாடலில் ஒன்று போல ஒலிக்கும் சொற்களை எடுத்து எழுதுக.**

சென்றன, கண்டன, முயன்றன, போட்டன, கொண்டன, கொத்தின, கூவின, நிறுத்தின, படுத்தின, நோக்கின.

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. நெட்டை 2. சமாதானம் 3. மெதுவாய் 4. வருத்தமுற்று

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தேடி 2. சிறகை 3. கட்டுப் 4. 1922
5. குழந்தைக் கவிஞர்

**ஈ) சிறுவினாக்கள்:**

1. எத்தனைக் கோழிக்குஞ்சுகள் இரையைத் தேடிச் சென்றன?
எட்டு கோழிக்குஞ்சுகள் இரையைத் தேடிச் சென்றன.

2. குறுக்கே சென்றது எது?
குட்டையான ஒரு புழு குறுக்கே சென்றது.

3. யாரின் குரலைக் கேட்டு கோழிக்குஞ்சுகள் சண்டையை நிறுத்தின?
அம்மா கோழியின் குரலைக் கேட்டு கோழிக்குஞ்சுகள் சண்டையை நிறுத்தின.

4. அழ. வள்ளியப்பா எங்கே பிறந்தார்?
அழ. வள்ளியப்பா புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் பிறந்தார்.

5. அழ. வள்ளியப்பா எழுதிய நூல்கள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.
மலரும் உள்ளம், பாப்பாவுக்குப் பாட்டு, சின்னஞ்சிறு பாடல்கள், நல்ல நண்பர்கள் முதலிய நூல்களை அழ. வள்ளியப்பா எழுதியுள்ளார்.

**உ) பெருவினாக்கள்:**

1. "எட்டுக் கோழிக் குஞ்சுகள்" எனும் பாடலின் பொருளைக் கதையாக எழுதுக.
எட்டுக் கோழிக் குஞ்சுகள் இரையைத் தேடிச் சென்றன. அங்கே ஒரு குட்டையான புழு குறுக்கே சென்றதைக் கண்டன. எட்டுமே பாய்ந்தோடி புழுவைக் கொல்ல முயற்சித்தன. அதனால் ஒவ்வொன்றும் சிறகை அடித்து பாய்ந்து சண்டைப் போட்டுக் கொண்டன. அச்சமயம் தங்களின் அம்மாவின் குரல் கேட்கவே சண்டையை நிறுத்திவிட்டு, தங்களின் மனதை கட்டுப்படுத்திக் கொண்டன. சண்டை முடிந்து தரையை

பார்த்தபோது அந்தப் புழுவை காணவில்லை. சண்டை முடிவதற்கு முன்பாகவே தனது உயிரை காப்பாற்றிக் கொண்டு மகிழ்ச்சியாக தப்பி ஓடிவிட்டது அந்தப் புழு.

2. அழ. வள்ளியப்பா பற்றி சிறு குறிப்பு வரைக.

அழ. வள்ளியப்பா புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் நாள் பிறந்தார். இவரின் பெற்றோர் அழகப்ப செட்டியார் – உமையாள் ஆச்சி. சில காரணங்களால் இவரால் பள்ளிப் படிப்பைத் தொடர முடியவில்லை. எனவே 1940 ஆம் ஆண்டு சென்னையிலுள்ள சக்தி பத்திரிக்கையில் அலுவலக காசாளராகப் பணியில் சேர்ந்தார். 1950 ஆம் ஆண்டு குழந்தை எழுத்தாளர்களைத் திரட்டி குழந்தை எழுத்தாளர்கள் சங்கத்தை நிறுவினார். ‘‘சிரிக்கும் பூக்கள்’’ என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டப் பின்னர், இவரை ‘‘குழந்தைக் கவிஞர்’’ எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைத்தனர். இவர் மலரும் உள்ளம், பாப்பாவுக்குப் பாட்டு, சின்னஞ்சிறு பாடல்கள், நல்ல நண்பர்கள் முதலிய நூல்களை எழுதியுள்ளார். 1982 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவருக்கு ‘‘தமிழ் பேரவைச் செம்மல்’’ என்ற விருதை அளித்தது. குழந்தைக் கவிஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

## 31. அன்னை தெரேசா

**பக்கம் 117**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) 1910  2. அ) 1929  3. இ) மோத்திஜில்  4. அ) 1979

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியூ
2. லொரெட்டோ
3. 1950
4. சிசுபவன்

**இ) சிறுவினாக்கள்:**

1. அன்னை தெரேசா எங்கே, எப்போது பிறந்தார்?

அன்னை தெரேசா அவர்கள் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாள் யூகோஸ்லேவியா நாட்டிலுள்ள ஸ்கோப்ஜி என்ற சிறிய நகரில் பிறந்தார்.

2. தெரேசா எங்கு ஆசிரியராகப் பணியாற்றினார்?

டார்ஜிலிங்கில் உள்ள லொரெட்டோ இல்ல பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார்.

3. ‘‘சிறந்த சேவகர்’’ என தெரேசா போற்றப்படக் காரணம் என்ன?

அன்னை தெரேசா சேவை மனப்பான்மை மற்றும் கருணை

உள்ளத்துடன் ஏழை மக்கள், ஆதரவற்றோர், நோயாளிகள் என அனைவருக்கும் தன்னால் இயன்ற உதவிகளை செய்து வந்ததால் "சிறந்த சேவகர்" என போற்றப்படுகிறார்.

4. "சிசுபவன்" இயக்கம் என்றால் என்ன?

ஊனமுற்ற, மன வளர்ச்சி குன்றிய, குப்பையில் எறியப்பட்ட குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்து உதவுவதற்காக 1955 ஆம் ஆண்டு "சிசுபவன்" என்னும் இயக்கத்தை தெரேசா உருவாக்கினார்.

5. "காந்தி பிரேம் நிவாஸ்" என்பது யாது?

கல்கத்தாவிற்கு அருகிலுள்ள டிடகார் எனும் கிராமத்தில் தொழுநோயாளிகளுக்கான மருத்துவமனையை தெரேசா நிறுவினார். அதுவே "காந்தி பிரேம் நிவாஸ்" என்ற பெயரில் இயங்கி வருகிறது.

**ஈ) பெருவினாக்கள்:**

1. அன்னை தெரேசாவின் இளமைப் பருவம் குறித்து எழுதுக.

தெரேசா கிறிஸ்துவ தேவாலயத்தில் ஆரம்பக் கல்வியை பயின்றார். தனது குழந்தைப் பருவ நாட்களை தேவாலயத்திலும், கிறிஸ்துவ மத நம்பிக்கையிலும் கழித்தார். படிப்பில் மட்டும் அல்லாமல் சமூக சேவையிலும் ஈடுபட்டார். சிறு வயதிலேயே ஏழை எளியவர், உடல் ஊனமுற்றோர், பள்ளி மாணவர்கள், மருத்துவமனை நோயாளிகள் என பலருக்கு சேவையாற்றினார்.

2. தெரேசா என்னும் பெயர் ஏற்படக் காரணம் என்ன?

அன்றையக் காலக்கட்ட விதிகளின் படி புதிதாக மேற்கு வங்க கத்தோலிக்க சபையில் சேருவோர் தங்களின் பெயர்களை மாற்றம் செய்து கொள்ள வேண்டும். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சகோதரி "தெரேசா மார்டின்" என்பவர் ஏழை எளிய நோயாளிகளுக்கு சேவை செய்து தனது உயிரை அர்பணித்தார். அவரின் நினைவாக தனது பெயரை "தெரேசா" என மாற்றிக் கொண்டார்.

3. இந்தியாவில் தெரேசா ஆற்றிய சமூகப் பணிகள் பற்றி சிறு குறிப்பு வரைக.

- டார்ஜிலிங்கில் உள்ள லொரெட்டோ இல்ல பள்ளியில் ஆசிரியராக இருந்து கொண்டு மருத்துவ சேவை, குழந்தைகளை குளிப்பாட்டி சாப்பாடு ஊட்டுதல், நோயாளிகளை சுத்தப்படுத்துதல் போன்ற சேவைகளைச் செய்தார்.
- **1942–43** ஆம் ஆண்டு பஞ்சத்தால் பரிதவித்த மக்களுக்கு பணியாற்ற தனது ஆசிரியப் பணியைத் துறந்து முழுநேர சேவை செய்தார்.

- 1949 ஆம் ஆண்டு கல்கத்தாவிலுள்ள மோத்திஜில் என்ற குடிசைப்பகுதி குழந்தைகளுக்காக பள்ளி, மருத்துவமனை போன்றவற்றை ஆரம்பித்தார்.
- 1950 ஆம் ஆண்டு “பிறர் அன்பின் பணியாளர்” எனும் அமைப்பைத் தொடங்கி சமுதாயத்தில் கைவிடப்பட்டோர்க்கு அடைக்கலம் அளித்தார்.
- 1955 ஆம் ஆண்டு “சிசுபவன்” என்ற அமைப்பை உருவாக்கி ஊனமுற்ற, மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு அடைக்கலம் அளித்தார்.
- டிடகார் என்னும் கிராமத்தில் தொழுநோயாளிகளுக்கான மருத்துவமனையை நிறுவினார். அதுவே இன்று “காந்தி பிரேம் நிவாஸ்” என்ற பெயரில் இயங்கி வருகிறது.

## 32. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

**பக்கம் 119**

**அ) எழுவாயைக் கண்டுபிடித்து கோடிடுக.**

1. முருகன் 2. நாம் 3. அன்னை 4. தலைமையாசிரியர் 5. பசு

**ஆ) கோடிட்ட இடங்களைத் தகுந்த செயப்படுபொருளால் நிரப்புக.**

1. சிலையை 2. புத்தகம் 3. கூரை 4. காய்கறி 5. பாடம்

**இ) இங்குள்ள வாக்கியத்தின் உறுப்புகளை இணைத்துப் பொருள் தரும்படி எழுதுக.**

1. தச்சர் மரச்சாமான்களைச் செய்தார்.
2. ஓவியர் ஓவியத்தை வரைந்தார்.
3. குறத்தி கூடையைப் பின்னினாள்.
4. ஆசிரியர் பாடம் கற்பித்தார்.
5. சீதா வீணையை இசைத்தாள்.

## 33. ஐந்து வண்ண அழகு மான்!

**பக்கம் 123**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. மான் எங்கு வாழ்ந்து வந்தது? அது பார்ப்பதற்கு எப்படி இருந்தது?

   இந்தியாவின் ஓர் அடர்ந்த மலைப்பகுதியில் மான் வாழ்ந்து வந்தது. அதன் உடலில் ஐந்து வண்ணங்கள் இருந்தன. அதன் கொம்புகள் மாணிக்கம் போல ஒளி வீசின.

2. உயிர் பிழைக்க போராடியது யார்? அவனைக் காப்பாற்றியது யார்?

   ஆற்று வெள்ளத்தில் அடித்து வரப்பட்டு உயிருக்குப் போராடிய ஒரு மனிதனின் மீது இரக்கப்பட்ட மான் அவனை காப்பாற்றியது.

3. தன்னால் காப்பாற்றப்பட்டவனிடம் மான் என்ன வேண்டியது?
உடலில் ஐந்து வண்ணங்களும், பளபளக்கும் கொம்புகளும் கொண்ட தன்னை பார்த்ததாக யாரிடமும் கூற வேண்டாம் என தன்னால் காப்பாற்றப்பட்டவனிடம் மான் வேண்டிக் கொண்டது.

4. அரசனின் அறிவிப்பு என்ன?
ஐந்து வண்ணங்கள் உடைய மான் எங்கே உள்ளது என்று தெரிவித்தால் ஓர் ஊரையே பரிசாக அளிப்பதாக அரசன் அறிவித்தான்.

5. மான் அரசனிடம் என்ன கூறியது?
மான் அரசனிடம் வந்து பல வண்ணங்களில் ஒளி வீசும் தோல் இருப்பதால் தான் அச்சத்தில் இருப்பதாகவும், தான் இருக்குமிடம் பற்றி அரசனுக்கு எப்படி தெரியும் எனவும் வினவியது.

6. மானின் பேச்சைக் கேட்ட அரசன் செய்தது என்ன?
மானின் பேச்சை கேட்ட அரசன், மானின் உள்ளத்தில் அன்பு நிறைந்திருப்பதாக கூறினான். அந்த மனிதன் பேராசைக் கொண்டவன் எனக்கூறி அவனை சிறையில் அடைத்தான். மேலும் தனது நாட்டில் இனி யாரும் மான்களை வேட்டையாட கூடாது எனவும் கட்டளையிட்டான்.

## 34. கத்தியின்றி ரத்தமின்றி

**பக்கம் 125**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. நாமக்கல் கவிஞர் கூறும் யுத்தம் எத்தகையது?
நாமக்கல் கவிஞர் கூறும் யுத்தம் கத்தியும், ரத்தமும் இல்லாத சத்திய யுத்தம் ஆகும்.
2. காந்தியின் வழி யாது?
காந்தியின் வழி அகிம்சை வழி ஆகும்.

## 35. திருக்குறள்

**பக்கம் 129**

**அ) பிரித்து எழுதுக.**

1. யாது + ஒன்றும்  2. புரை + தீர்த்த  3. புகழ் + இல்லை
4. புறம் + தூய்மை  5. அகம் + தூய்மை

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பொய்மை  2. நன்மை  3. இகழ்  4. அகம்  5. கெட்ட

**இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பொய்யா 2. மனத்தொடு 3. அறமுந் 4. பொய்யாமை
5. வாய்மையின்

**ஈ) சிறுவினாக்கள்:**

1. வாய்மை எனப்படுவது யாது?

உண்மை என்று சொல்லப்படுவது எதுவெனில், எவர்க்கும் எத்தீங்கும் தராத சொற்களை சொல்வதே ஆகும்.

2. ‘‘பொய்மையும் வாய்மை யிடத்த’’ எப்போது?

குற்றமற்ற நன்மையை விளைவிக்குமானால் பொய்யான சொற்களும் வாய்மை என்று கூறத்தக்க இடத்தைப் பெற்றுவிடும்.

3. ‘‘தன்நெஞ்சே தன்னைச் சுடும்’’ ஏன்?

பொய் என்று உள்ளம் உணர்ந்ததை சொல்ல வேண்டாம். சொன்னால், அதைப் பொய் என்று உலகம் அறியும் போது தன் மனமே தன்னைச் சுடும்.

4. ‘‘புறந்தூய்மை நீரான் அமையும்’’ என்ற குறளின் பொருளை எழுதுக.

உடம்பு தண்ணீரால் சுத்தமாகும். உள்ளம் உண்மையால் சுத்தமாகும்.

5. ‘‘எல்லா விளக்கும் விளக்கல்ல’’ என்பதை விளக்குக.

புறத்தில் உள்ள இருளை நீக்கும் விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல. சான்றோர்க்கு அகத்தின் இருளை நீக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும்.

## 36. கற்றுக் கொள்வோம்!

**பக்கம் 134**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. காந்தியடிகள் 2. சாரசாத் 3. துரோணாச்சாரியார்
4. மகாபாரதம் 5. எழுத்தாளர்

**ஆ) சிறுவினாக்கள்:**

1. ஆசிரியர் கூறிய செயல்பாடு என்ன?

மாணவர்களுக்கு பிடித்த பிரபலத்தின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தைக் கூறி, அதிலிருந்து அவர்கள் கற்றுக் கொண்ட பாடம் என்ன என்று கூற வேண்டும் என்பதே ஆசிரியர் கூறிய செயல்பாடு ஆகும்.

2. கதை கூறிய மாணவர்களின் பெயர்களை எழுதுக.

எழில், அமுதன், மகிழன், இசைப்பிரியன் ஆகியோர் கதைக் கூறிய மாணவர்கள் ஆவர்.

3. காந்தியடிகளின் வாழ்க்கைச் சம்பவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய நீதி என்ன?

   காந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்து நாம் அகிம்சையோடு வாழ வேண்டும் எனவும், நமக்கு பயன்படாதது மற்றவர்க்குப் பயன்படட்டும் என்ற நீதியையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

4. பசியில் வாடிய பிச்சைக்காரனை மகிழ்வித்த டால்ஸ்டாய் கூறிய வார்த்தை என்ன?

   பசியில் வாடிய பிச்சைக்காரனை பார்த்து டால்ஸ்டாய் கூறிய "சகோதரனே" என்ற கனிவான வார்த்தையே அவனை மகிழ்வித்தது.

5. அர்ச்சுனனுக்கு என்ன தெரிவதாக அவன் குருவிடம் கூறினான்?

   அம்பு பாய வேண்டிய கிளியின் கழுத்து மட்டுமே தனக்கு தெளிவாக தெரிவதாக அர்ச்சுனன் குருவிடம் கூறினான்.

**ஆ) பெருவினாக்கள்:**

1. "பயிற்சி மூலம் நம் திறமையை வளர்த்துக் கொள்ளலாம்" என்று உணர்த்திய சாரசாத் அவர்களின் வாழ்க்கைச் சம்பவத்தை எழுதுக.

   ஸ்பெயின் நாட்டு இசை மேதை சாரசாத் வயலின் வாசிப்பதில் ஈடு இணையற்றவர். ஒரு நாள் அவரின் இசைக் கச்சேரியைக் கேட்ட பத்திரிக்கையாளர் அவர் அருமையாக இசைப்பதாகவும், இந்த திறமை அவருக்கு எப்படி வந்தது எனவும் கேட்டார். அதற்கு சாரசாத் இருபது ஆண்டுகளாக நாள்தோறும் எட்டு மணி நேரம் வயலின் பயிற்சி செய்தால் இப்படிப்பட்ட திறமையை யாரும் பெறலாம் என்றார்.

2. யார் சிறந்த மாணவன் என்பதை துரோணாச்சாரியார் எவ்வாறு கண்டறிந்தார்?

   துரோணாச்சாரியார் தனது மாணவர்களுக்கு வில் பயிற்சி கற்றுத் தந்தார். ஒவ்வொரு மாணவனையும் அழைத்து வில்லைக் கொடுத்து மரத்தின் மேலுள்ள கிளியை குறிவை என்றார். குறிவைத்தவர்கள் "குருவே, கிளியை வீழ்த்தவா?" என்றார்கள். உடனே குரு, "உன் கண்ணுக்கு மரம் தெரிகிறதா? கிளை தெரிகிறதா?" என கேட்டார். அனைவரும் "தெரிகின்றன" என பதில் கூறினார்கள். ஆனால், அர்ச்சுனன் மட்டும் "குருவே, கிளியின் கழுத்து மட்டுமே தெரிகிறது. கிளியை வீழ்த்தவா?" என்றான். உடனே குரு, "வில்லாளி குறி வைக்கும் போது குறியில் மட்டும் கவனம் இருக்க வேண்டும். வேறு எதுவும் தெரியக் கூடாது" என்றார். எனவே அர்ச்சுனன் தான் சிறந்த மாணவன் என பாராட்டினார்.

3. டால்ஸ்டாய் அவர்களின் வாழ்க்கை நிகழ்வையும், அதிலிருந்து இசைப்பிரியன் என்னக் கற்றுக் கொண்டான் என்பதையும் எழுதுக.

புகழ்பெற்ற எழுத்தாளரான டால்ஸ்டாய் செல்வக் குடும்பத்தில் பிறந்தாலும் அன்புள்ளம் கொண்டவர். ஒரு முறை அவர் வீதியின் வழியாக வரும் போது வயிறு ஒட்டிய ஒரு பிச்சைக்காரன் ஏதேனும் உதவுங்கள் என்று அவரிடம் கேட்டான். பணம் எடுத்து வர மறந்து விட்ட டால்ஸ்டாய் “சகோதரனே, இப்போது பணம் இல்லை. உன்னை மறுமுறை பார்த்தால் உதவுகிறேன்” என்றார். உடனே பிச்சைக்காரன் மகிழ்ச்சியுடன் “என்னை இதுவரை யாரும் சகோதரனே என அழைத்தது இல்லை. இதுவே எனக்கு போதும்” என மகிழ்ச்சியுடன் கூறினான். இதன் மூலம் ஒருவனை செல்வத்தைக் கொண்டு மதிப்பிடக் கூடாது. சக மனிதனை மதித்து மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என கற்றுக் கொண்டதாக இசைப்பிரியன் கூறினான்.

## 37. இன எழுத்துகள்

**பக்கங்கள் 136-137**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) நெடில் 2. அ) குற்றெழுத்து 3. இ) தனி இனம்
4. ஆ) மெய் எழுத்துகள் 5. அ) ஆய்த எழுத்திற்கு

**ஆ) சரியான இன எழுத்துகளுடன் பொருத்துக.**

1. த் – ந்
2. ற – ன
3. ஐ – இ
4. ஔ – உ
5. க் – ங்

**இ) சரியான இன எழுத்துகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | – | ஆ | க் | – | ங் |
| இ | – | ஈ | ச் | – | ஞ் |
| உ | – | ஊ | ட் | – | ண் |
| எ | – | ஏ | த் | – | ம் |
| ஐ | – | இ | ப் | – | ம் |
| ஒ | – | ஓ | ற் | – | ன் |
| ஔ | – | உ | | | |

**ஈ) கோடிட்ட இடங்களைச் சரியான இன எழுத்துகளால் நிரப்புக.**

1. மஞ்சள்
2. பந்தயம்
3. பன்றி
4. சுண்டல்
5. இஞ்சி
6. நஞ்சை
7. சந்தை
8. அறன்
9. காஞ்சி
10. செம்பருத்தி

**உ) வினாக்களுக்கு விடையளி.**

1. இன எழுத்துகள் என்றால் என்ன?

   தமிழ் எழுத்துகள் பிறக்கின்ற இடம், அவற்றை ஒலிப்பதற்கான முயற்சி கால அளவு, பொருள், வடிவம் ஆகியவற்றுள் ஒன்றோ அல்லது பலவோ ஒத்து இருப்பின் அவற்றை இன எழுத்துகள் என்பர்.

2. உயிர் குறில் எழுத்துகளுக்கு இனமாவது எது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

   உயிர் குறில் எழுத்துகள் சற்று நீண்டு ஒலித்தால் நெடில் எழுத்தாக மாறிவிடும். ஆகவே ஒவ்வொரு குறில் எழுத்திற்கும் அதற்குரிய நெட்டெழுத்தே இன எழுத்தாகும். ஐ மற்றும் ஔ ஆகிய இரு நெட்டெழுத்துகளுக்கும் தனியே குற்றெழுத்து இல்லை. எனவே ஐ–க்கு இ–யும், ஔ–க்கு உ–வும் இன எழுத்துகளாகும்.

   எ.கா. அ–ஆ, இ–ஈ, உ–ஊ, எ–ஏ, ஐ–இ, ஒ–ஓ, ஔ–உ.

3. வல்லின மெய் எழுத்துகளின் இனமாவது எது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

   மெய் எழுத்துகளில் வல்லின எழுத்துகள் க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறுக்கும் மெல்லின எழுத்துகள் ங், ஞ், ண், ந், ம், ன் ஆறும் இன எழுத்தாகும்.

   எ.கா. க்–ங், ச்–ஞ், ட்–ண், த்–ம், ப்–ம், ற்–ன்.

## 38. அறிவுடையார் ஆவ தறிவார்!

**பக்கம் 140**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. இரவில் தெனாலி ராமன் வீட்டிற்கு வந்தவர்கள் யார்?

   இரவில் தெனாலி ராமன் வீட்டிற்கு திருடர்கள் வந்தனர்.

2. தோட்டத்தில் திருடர்கள் மறைந்திருந்ததைக் கண்ட தெனாலி ராமன் என்ன செய்தார்?

   திருடர்களைக் கண்ட தெனாலி ராமன் தனது மனைவியிடம் நாட்டில் திருடர்களின் தொல்லை அதிகமாகி விட்டதால் வீட்டிலுள்ள நகை மற்றும் விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் மூட்டையாகக் கட்டி கிணற்றில் போட்டு விடலாம் என திருடர்கள் காதில் விழும்படிக் கூறினார்.

3. கிணற்றிலிருந்த பெட்டிகளை எடுக்க திருடர்கள் என்ன செய்தனர்?

   கிணற்றில் இருந்த பெட்டியை எடுக்க எண்ணிய திருடர்கள்

கிணற்றின் ஆழத்தைக் கண்டு பயந்தனர். எனவே, கிணற்றின் நீரை இறைத்து கொட்டினால் எளிதாக பெட்டியை எடுத்துவிடலாம் என்று எண்ணி நீர் இறைக்கத் தொடங்கினர்.

4. தெனாலி ராமனின் தோட்டம் வளமானது எப்படி? விவரி.

திருடர்கள் இரைத்த நீரானது வாய்க்கால் வழியாக ஓடி, தோட்டத்தில் இருந்த செடிகளுக்கு பாய்ந்தது. எனவே, தெனாலி ராமனின் தோட்டம் வளமானது.

# குறிப்புகள்

# குறிப்புகள்